செ.வெ.எண்:382/2009(செமதொஅ) நாள். 10.11.2009

# 60வது காசநோய் வில்லைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் வெளியீட்டார்.

60வது காசநோய் வில்லைகளை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்களால் 10.11.2009 அன்று வெளியிடப்பட்டது. காசநோய் வில்லைகளின் மொத்த எண்ணிக்கை 1,00,800 அவற்றின் மொத்த மதிப்பு ரூ.2,01,600/-

இதன் மூலம் திரட்டப்படும் நிதி காசநோய் தடுப்பு திட்டத்திற்கான ஆராய்ச்சி, மருந்துகள் மற்றும் இதர மருத்துவ உபகரணங்களின் வாங்குவதற்கான கூடுதல் நிதி ஆதாரமாக பயன்படுத்தப்படுகிறது. எக்ஸ்-ரே பட கருள்கள் வாங்குவதற்கும் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள காசநோயாளிகளுக்கு நிதி உதவி செய்வதற்கும் காசநோய் வில்லைகளின் விற்பனை தொகை பயன்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் சமூகத்தின் எல்லா தரப்பினரும் பங்கேற்க வேண்டும் என்ற நோக்கத்தில் இக்காசநோய் வில்லைகள் மருத்துவத்துறை மட்டும் அல்லாது வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் ஊராட்சி மன்ற அலுவலர்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது.

எனவே, இக்காசநோய் வில்லைகளை பொதுமக்கள் வாங்கி திட்டத்திற்கு உதவிட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக்கொண்டார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்